**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**M.C.O.P.No.58/2023**
**வழக்கு சாட்சி PW.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருமதி.என்.வி.அமுதா அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விவேகானந்தன் | தொழில் | : ஓய்வு பெற்ற பணியாளர் |
| தகப்பனார் பெயர் | : பழனிச்சாமிகவுண்டர் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : பொருளூர் | வயது | : சுமார் 58 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 12.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பொருளூர், க.எண்.4/63 என்ற விலாசத்தில் வசிக்கும் பழனிச்சாமிகவுண்டர் மகன் சுமார் 58 வயதுள்ள விவேகானந்தன் ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| **வரிசை எண்** | **தேதி** | **ஆவணங்கள்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| 01 | --- | விவேகானந்தன் ஆதார் அட்டை சான்றொப்பமிடப்பட்டது. | சா.சா.ஆ.1 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு நீதிமன்றம் சரியயென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் கிடைக்கவில்லை என்றால் ? சரிதான். யார் அழைத்தன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன் என்றால் ? மனுதாரரின் வழக்குரைஞர் என்னை சாட்சியம் அளிக்க வரச் சொன்னதால் நான் வருகை புரிந்துள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் ? ஆமாம். அளித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ? சரிதான். விசாரித்தார்கள். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக என்னை வழக்கில் முன்னிலைப்படுத்தியுள்ளார்கள் என்றால் ? சரிதான். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக நான் இருந்ததால் என்னை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் ? சரிதான். நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? சரிதான். நான் எம்.எ. வரலாறு படித்துள்ளேன். கடந்த 18.03.2020ம் தேதி மாலை 05.15 மணிக்கு தான் வேலை பார்த்தும், பள்ளிக்கூட கேட் அருகே நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது இந்த மனுதாரர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது ஜே.சி.பி வாகனத்தின் பக்கெட் மோதி விபத்து ஏற்பட்டு மனுதாரருக்கு அடிபட்டுவிட்டதாக தகவல் கிடைத்து அங்கு சென்று பார்த்ததாக STC.No.162/2020 என்ற வழக்கில் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது சம்பவத்தை நேரில் பார்த்தாக நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்காத நிலையில் பார்த்ததாக சொல்கிறேன் என்றால் ? சரியல்ல. ஜே.சி.பி வாகனத்தின் பதிவு எண்

எனக்கு தெரியாது என்றால் ? நபர் அடிபட்டுவிட்டதால் அவரச கதியில் ஜே.சி.பி வாகனத்தின் எண்ணை நான் பார்க்கவில்லை. அடிபட்டவரின் மனைவியிடம் நான் விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்ன போதுகூட ஜே.சி.பி வாகனத்தின் பதிவு எண்ணை நான் குறிக்கவில்லை என்றால் ? இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.15 ஆவணத்தில் உள்ள மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் தான் விபத்து நடந்தது என்றால் ? சரிதான். மாதிரி வரைபடம் வரைந்த போது நான் போலீசாருடன் உடன் இருந்தேன். பள்ளியின் கேட்டிற்கும், சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் ? சுமார் 50 அடி துாரத்திற்குள்ளாகி இருக்கும். நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல. நானும், மகுடீஸ்வரனும் ஒன்றாக தான் வேலை பார்த்து வந்தோம் என்றால் ? சரிதான். மற்றொரு நபர் விபத்து நடந்ததை பற்றி பள்ளியில் பணிபுரியும் சார் போல் உள்ளார் என்று மற்றொரு நபர் என்னிடம் சொன்னதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் ? சரிதான். அடிபட்ட நபர் கீழே விழுந்தபிறகு மற்றொரு நபர் வந்து என்னிடம் சொன்ன பிறகு தான் அடிபட்ட நபர் மகுடீஸ்வரன் என்று எனக்கு தெரியும் என்றால் ? ஆமாம். போலீசார் விசாரணைக்கு என்னை அழைத்த போது கூட ஜே.சி.பி வாகனத்தின் பதிவு எண்ணை நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் ? சரிதான். சொல்லவில்லை. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திற்கு முரண்பட்டு இந்நீதிமன்ற சாட்சியத்தில், இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் முன்னிலைப்படுத்துவதால் நான் அளித்துள்ள சாட்சியங்கள் ஏற்புடைய சாட்சி அல்ல என்றால் ? சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், மற்றொரு நபர் சொன்னதன் அடிப்படையிலும் தான் நான் விபத்து பற்றி தெரிந்து கொண்டதால் சம்பவத்தை கண்ணுற்றதாக நான் முதன்மை சாட்சிய நிரூபண பிரிமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறு என்றால் ? சரியல்ல. மனுதாரருக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.12 16:14:12 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்